# நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை

## பணிப்பாளர் நாயகம் பதவி (CEO)

பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் (தலைமை நிறைவேற்று அதிகாரி) பதவிக்கு நியமிப்பதற்காக தகுதி பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பணிப்பாளர் நாயகம் அதிகாரசபையின் தலைமை நிறைவேற்று அதிகாரியாக இருப்பார் மற்றும் 2025 ஆம் ஆண்டின் இன் 17 ஆம் இலக்க பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை சட்டத்தின்படி அதிகாரசபையின் விவகாரங்களை நிர்வகித்தல், முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டு கண்காணிப்புக்காக முகாமைத்துவ சபையை வழிநடத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்கு பொறுப்பாவார்.

**நியமனத்தின் தன்மை**

ஐந்து (5) ஆண்டு காலத்திற்கு மேற்படாததாக இந்த நியமனம் முழு நேர ஒப்பந்த அடிப்படையில் அமையும்.

**சம்பள அளவு**

ரூபா 500,000 – 25,000 x 4 – 600,000

இந்தப் பதவி EPF மற்றும் ETF பங்களிப்புகள் மற்றும் அரசாங்கம் அங்கீகரித்த ஏனைய நன்மைகளை பெறுவதற்கு உரித்தானதாகும்.

**தகைமைகள்:**

எதிர்பார்ப்புடைய விண்ணப்பதாரர் கீழுள்ள (1), (2), (அ) அல்லது (ஆ) மற்றும் (3) பந்திகளில் குறிப்பிடப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(1) பின்வரும் துறைகளில் ஒன்றில் அல்லது தொடர்புடைய நெருக்கமான துறை ஒன்றில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து இளமாணி பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்:

சட்டம்/ நிதி/ பொருளாதாரம்/ வர்த்தக நிர்வாகம்/ முகாமைத்துவம்/ கணக்கியல்/ ஒழுங்குமுறை இணக்கம்/ இடர் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம்/ தகவல் முகாமைத்துவம்/ தகவல் அமைப்புகள்/ தரவு பகுப்பாய்வுகள் (ஒழுங்குபடுத்தல் அல்லது நிதி கண்காணிப்புடன் தொடர்புபட்டது)

**மற்றும்**

(2) ஏதாயினும் ஒன்று-

(a) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பட்டப்பின்படிப்பு பட்டம் (முதுமானி அல்லது அதற்கு மேல்);

சட்டம்/ நிதி/ பொருளாதாரம்/ வர்த்தக நிர்வாகம்/ முகாமைத்துவம்/ கணக்கியல்/ ஒழுங்குமுறை இணக்கம்/ இடர் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம்/ தகவல் முகாமைத்துவம்/ தகவல் முறைமைகள்/ தரவு பகுப்பாய்வுகள் (ஒழுங்குபடுத்தல் அல்லது நிதி கண்காணிப்புடன் தொடர்புபட்டது)

**அல்லது**

(b) ஒழுங்குபடுத்தல், நிதி, நிர்வாகம், முகாமைத்துவம் அல்லது கணக்கியலுடன் தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை அமைப்பு அல்லது பட்டய நிறுவனம் ஒன்றின் தொழில்முறை அங்கத்துவம் அல்லது இலங்கை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக அனுமதி.

**மற்றும்**

(3) பந்தியில் (1) குறிப்பிடப்பட்ட இளமாணிப் பட்டத்தை பெற்ற திகதியில் இருந்து கணக்கிடப்பட்டதாக குறைந்தது 20 ஆண்டுகள் தகைமைக்குப் பின்னரான அனுபவம், அதில் குறைந்தது 10 ஆண்டுகள் முகாமைத்துவ பதவி நிலையிலும் குறைந்தது 5 ஆண்டுகள் சிரேஷ்ட நிறைவேற்றுநர்/ உயர் முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் அனுபவத்தை நிரூபித்தல் வேண்டும், பின்வரும் விடயப் பரப்புகளில் ஒன்று அல்லது அதற்கு மேலுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்:

சூதாட்டம், பந்தயம், நிதிச் சேவைகள் அல்லது ஏனைய அதிக இடர் கொண்ட ஒழுங்குபடுத்தப்பட்ட தொழில்கள்/ நிதி அல்லது பொருளாதார ஒழுங்குபடுத்தல்/ உரிமம் அளித்தல் மற்றும் இணக்க கண்காணிப்பு/ சட்ட அமுலாக்கல், விசாரணை அல்லது ஒழுங்குமுறை அமுலாக்கல்/ பண மோசடி தடுப்பு/ பயங்கரவாத நிதித் தடுப்பு (AML/CFT)/ பொதுத் துறை ஒழுங்குபடுத்தல் நிர்வாகம்/ நிறுவன அமைப்பு உருவாக்கம் அல்லது ஒழுங்குமுறைச் சீர்திருத்தத்தில் ஒழுங்குபடுத்தல் அனுபவம்.

**வயது**

அபேட்சகர் 40 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**தேர்வு நடைமுறை**

தேர்வு பின்வருவனவற்றை உள்ளடக்கிய ஒரு போட்டி செயல்முறையின் மூலம் நடைபெறும்;

- (விண்ணப்பத்துடன் சமர்ப்பிப்பதற்கு) 1500 சொற்களுக்கு மேற்படாதவாறு எழுத்துமூல மூலோபாய முன்மொழிவு ஒன்றை மதிப்பிடுதல்
- எழுத்துமூல மூலோபாய முன்மொழிவின் அடிப்படையிலான முன்வைப்பு; மற்றும்
- கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

* எழுத்துமூல மூலோபாய முன்மொழிவு பின்வரும் அளவுகோல் தொடர்பில் அவதானம் செலுத்துதல் வேண்டும்;

- பணச்சூதாட்ட ஒழுங்குமுறை மற்றும் கொள்கை சவால்கள் தொடர்பில் புரிதல்
- அதிகாரசபையின் அமைப்பு மற்றும் செயற்படுத்தலுக்கான மூலோபாய பார்வை முன்மொழியப்பட்ட ஒழுங்குமுறை, இணக்கம் மற்றும் அமுலாக்க அணுகுமுறை
- சாத்தியக்கூறு, புத்தாக்கம் மற்றும் செயலாக்க செயற்திட்டம்
- நிறுவன ஒருமைபாடு, சர்வதேச ஒத்துழைப்பு, இடர் முகாமைத்துவம் மற்றும் பங்குதாரர் ஒருங்கிணைப்பு

அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டு முறையின் அடிப்படையில் திறமை ஒழுங்குபடி மட்டுமே நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

**விண்ணப்பங்கள்**

**பின்வருவனவற்றுடனான விண்ணப்பங்கள்**

- சுயவிபரக்கோவை
- கல்வி மற்றும் தொழில்முறை தகைமைகளின் பிரதிகள்
- சேவை மற்றும் அனுபவ விபரங்கள்
- எழுத்துமூல மூலோபாய முன்மொழிவு

2026 மே 20 அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக செயலாளர், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, செயலகம், லோட்டஸ் வீதி, கொழும்பு 01, இலங்கை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது info@mo.treasury.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் (அல்லது மின்னஞ்சலின் subject line இல்) "பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை, பணிப்பாளர் நாயகம் பதவி" என்று குறிப்பிடவும்.

அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவன தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

**செயலாளர்**
**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,**
**செயலகம், லோட்டஸ் வீதி, கொழும்பு 01,**
**இலங்கை.**
**2026.05.10**